[1987 ஏப்ரல் 9

திருப்பூரில் ஸ்டேடியம். ..

357—(*வினா எண். 11411) திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பார்—

திருப்பூரில் ஸ்டேடியம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே வளர்ந்து வருகிற மிக முக்கியமான நகரங்களில் திருப்பூரும் ஒன்று என்ற முறையில், நீண்டகாலமாக அந்த நகரத்தின் கோரிக்கையாக இருந்து வருகிற விளையாட்டு அரங்கத்தைக் கொண்டு வருவதற்கு இனியாவது அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, விளையாட்டு கழகத்தோடு கலந்து அரசு நிதிநிலைமைக்கேற்ப இதை ஆயும்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஒரு பணியை மேற்கொள்வதற்கு முன்னர், அந்தப் பணிக்கு உரிய தேவைகளை மதிப்பீடு செய்துதான் மேற்கொள்ளும் என்பது பொதுவாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிற மரபாகும். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிலேயே பல்வேறு நகரங்களிலேயே குறிப்பாக திருப்பூர் நகரத்திலே நான் தேசிய அளவிலேயும் சரி, மாநில அளவிலேயும சரி, பல்வேறு துறைகளைச் சேர்ந்த விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே அந்த நகரத்தின் தேவையை காலத்தில் உணர்ந்து, இதற்கு மிக முக்கியத் தேவை இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டு, இந்தத் திட்டத்தை விரைவில் அறிவிக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, திருப்பூருக்கு என ஒரு விளையாட்டு அரங்கம் வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்தது. ஆனால் இடப்பிரச்சினை எழுந்தது. நல்ல இடம் கிடைக்குமானால், இதை ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

1987 ஏப்ரல் 9]

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பெரிய நகரங்களிலே ஸ்டேடியம் கட்டுகின்ற போது, நகரத்தினுடைய மையப் பகுதியிலே கட்டப்படாமல் ஊரின் ஒதுக்குப்புறத்திலே கட்டப்படுகிறது. உதாரணமாக, திருச்சியில் கட்டப்பட்ட விளையாட்டு அரங்கம் திருச்சி நகரத்தின் ஓரத்தில், ஒதுக்குப்புறத்திலே கட்டிய காரணத்தால் அந்த ஸ்டேடியம் பயனற்ற ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா? ஆகவே இனிமேல் கட்டப்படுகின்ற ஸ்டேடியங்கள் நகரத்தினுடைய மையப்பகுதியில் கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும், நகரத்தின் மையப் பகுதியிலே இருக்கிற இடப்பிரச்சினையைப் பற்றி. முடிந்த அளவிற்கு நகரப் பகுதியிலே இருக்க வேண்டும் என்பதுதான் நல்லது என அரசு கருதுகிறது. இதை அரசு கருத்தில் கொள்ளும்.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தொகுதி மாரியூரில் சாக்லெட் தொழிற்சாலை.

358—(* வினா எண். 4299) திரு. அ. பிரணவநாதன்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடித் தொகுதி மாரியூரில் 1979-ல் ஏற்பட இருந்த சாக்லெட் தொழிற்சாலை துவங்காமல் இருப்பதற்கான காரணம் என்ன?

(ஆ) எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கடலாடி தொகுதி மாரியூரில் தேர்ந்தெடுத்த நிலத்தை தமிழ்நாடு பனைப்பொருள் இணையத்திற்கு முழுமையாக மாற்றம் செய்ய சில காலம் ஆகும் என்று தெரிவதால், இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் அமைத்திட தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியமும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து இடம் தேர்வு செய்து அவ்விடத்தில் சாக்லெட் தொழிற்சாலை உட்பட பல்வகை பொருள்களை செய்யும் பனைப்பொருள் உற்பத்தி மையம் அமைத்திட கதர் வாரியம் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS